مكتب توعية الجاليات بالأحساء
Islamic Da'awa & Guidance Center
Al-Ahsa

# அன்புள்ள அம்மா!

# إلى أمي الحبيبة أسلمي

« باللغة التاميلية »

நஸீம் காஜி
(ஹேம்குமார் அகர்வால்)
தமிழில்:
எஸ்.எம். மன்சூர்

تأليف : نسيم خاجي
ترجمة : شريف الدين محمد منصور



## *FOR MORE INFORMATION ABOUT ISLAM PLEASE CALL OR WRITE*

لندن

The Islamic Foundation
223 London Road
Leicester Le2 Ize - UK
Tel. (0533) 700725

المانيا

Islamiches Zentrum
8 Munchen 45
Walinersir 1 - 3
Tel: (4989) 325081 - 325062
325077

الفلبين

Islamic Dawah Council
of the Philippines
Suite 416 FUBC Bldg. Escolta
Manila, Philippines
Tel.: 479 - 229

كندا

Islamic Information
Foundation
8 Laurel Lane, Mallfax N. S.
Canada, 83M 2P6
Phone (902) 445 2394

اليابان

Islamic Center, Japan
1 - 16 - 11 Ohara, Setagaya - Ku
Tokyo, 156 Japan
Tel. (03) 460-6169 Cable: Islamic Center
Tokyo
Telex: 2425329

الفلبين

Islamic Studies and Research Center
of the Philippines
P.O. Box 135 Cotabato City 9600
Fax: No. 214128
Philippines

0013

# அன்புள்ள அம்மா!

நஸீம் காஜி

(ஹேம்குமார் அகர்வால்)

தமிழில்:

எஸ்.எம். மன்சூர்

“பத்து மாதங்கள் சுமந்திருந்து
என்னைப் பெற்ற
என் அன்னை
என்
உயிரை விடவும்
அன்பிற்குரியவர்!
அவர்
என்
கண் எதிரிலேயே
கொழுந்து விட்டெரியும்
நரக நெருப்பில் வீழ்ந்து
வேதனைப் படுவதைக்
காண, நான்
ஒருபோதும் சகிக்கமாட்டேன்.
அந்த
பயங்கர வேதனையிலிருந்து
என்
அன்பே உருவான
அன்னையை
மீட்டெடுப்பதுதான்
என்
ஒரே எண்ணம்!”

★ நஸீம் காஜி.

# உள்ளே போகுமுன் ஒரு நிமிடம்.....

ஹேம்குமார் அகர்வால் ஒரு கல்லூரி மாணவர். பல மதங்களை, கொள்கை, கோட்பாடுகளை ஆராய்ந்தவர்; இறுதியில் இஸ்லாத்தின் சத்தியத்தினை சரிகண்டு, அதை இதய சுத்தியோடு தனதாக்கிக் கொண்டவர்; அதன்படி தனது வாழ்வையும் அமைத்துக் கொண்டவர். கடந்த பத்து பன்னிரண்டு வருடங்களாக இஸ்லாம்தான் அவர் வாழ்வின் முன்னோடிக் கோட்பாடாக அமையப் பெற்றுள்ளது.

'ஜாமியத்துல் ஃபலாஹ்', அஸாம்கார் மாநிலத்தில் அமையப் பெற்றுள்ள ஒரு கலைக் கூடம். அங்கு கல்வி பயின்ற அவர் ஹிந்தி மொழியில் இஸ்லாமிய நூல்களும் எழுதியுள்ளார். தான் பெற்ற அறிவை மற்றாரும், குறிப்பாக - உற்றார் உறவினர்கள், நண்பர்கள் பெற வேண்டும் என்பது அவர் ஆசை. இந்த ஆசை காரணமாக அவர் தமது உற்றார் உறவினர்களுடன் அடிக்கடி இஸ்லாத்தைப் பற்றி சுமுகமான முறையில் கலந்துரையாடினார்; கடிதங்களும் எழுதினார்.

அத்தகைய கடிதங்களுள், அவர் தன் அன்னைக்கு எழுதிய இக் கடிதம் மிக முக்கியமானது; சிறப்பானது. இக்கடிதம் மூலம் இவர் எடுத்துக் கொண்ட முயற்சி இரு விதப் பயன்களைக் கொண்டது.

- இஸ்லாத்தை ஒழுங்காக, தொடராகப் பின்பற்றுவதன் மூலம் அதன் சத்தியத்தினைப் புரிய வைப்பதுடன், 'அதில் நற்பயன்கள் பலவுண்டு' என்பதையும் உணரச் செய்வது.
- பெற்றோர் பற்றிய இஸ்லாமிய நோக்கு என்ன என்பதைத் தெளிவாக விளங்கச் செய்வது.

இந்நூல் கையடக்கமானது; மிகவும் சிறியது. என்றாலும் பாரிய நூலொன்று மேற்காணும் இரண்டு அம்சங்களை எடுத்து வைப்பதற்கு இணையாக, இது மிக இரத்தினச் சுருக்கமாகக் கருத்துக்களை முன்வைத்து உள்ளத்தை நெகிழ வைக்கின்றது.

இதைப் படிக்கும் ஒவ்வொருவரும் தன்னால் தன் பெற்றோருக்கு என்ன என்ன பணிவிடைகள் செய்ய முடிந்தன என்பதை நினைத்துப் பார்ப்பர். அதேவேளை பெற்றோரை வேதனைப் படுத்தியோரும் பாவமன்னிப்பு கேட்டு, திருந்தி நடப்பர். அந்த அளவுக்கு இஸ்லாமிய கருத்து இதனை அலங்கரிக்கின்றது.

நாம் அனைவரும் இச்சிறிய நூலைத் தவறாது படிப்பதும், படித்தவற்றை மற்றாருடன் பகிர்ந்து கொள்வதும் அவசியம்.

அல்லாஹ், அனைத்து மக்களுக்கும் நேரான வழியை காட்டி அருள்பாலிப்பானாக. அவனே புகழுக்குரியவன்.

மௌலவி ஏ.எல்.எம். இப்ராஹிம்.
(அமீர், இலங்கை ஜமாஅதே இஸ்லாமி)

கொழும்பு
*30. 10. 1985.*

## ஆசிரியர் பேசுகிறார்....

இக் கடிதம் சுமார் பத்தாண்டுகளுக்கு முன் எழுதப் பட்டது. அப்பொழுது நான் பலேரியா கஞ்ஜ் ஜாமியத்துல் ஃபலாஹ் (அஜம்கேல் மாவட்டம், உத்தரப் பிரதேசம்) கலைக் கூடத்தில் கல்வி பயின்று வந்தேன். நான் இருந்திருந்து வீடு போவது வழக்கம். இஸ்லாத்தைத் தழுவு முன், நான் இந்து மதத்தவர்களான அகர்வால் குடும்பத்த வரின் ஓர் உறுப்பினனாக இருந்தேன். என் தந்தை ஏற்கனவே காலஞ்சென்று விட்டதன் காரணமாக, என் இள மைக் காலம் மூத்த சகோதரரின் பராமரிப்பிலேயே கழிந்தது.

இஸ்லாத்தைப் பற்றி நானும் என் மூத்த சகோதரரும் ஒரே கருத்தைக் கொண்டிருந்தோம். அதனால், அவர் எனக்கு எதிராக இருக்கவில்லை; உதவி புரிந்தார். என்றாலும் என் அம்மாவுக்கு நான் இஸ்லாத்தைத் தழுவியது அறவே பிடிக்கவில்லை. அதுபோக, நான் அவரை விட்டு ஒதுங்கி தூர இடத்தில் கல்வி பயிலச் சென்றது, அவருக்கு இன்னும் பெரிய வேதனையாக அமைந்துவிட்டது.

நான் கல்வி பயின்றது தூரத்தில் என்றாலும் இருந்திருந்தாவது வீடு போவது என் வழக்கத்தில் இருந்தது. அவ்வாறு போகும்போதெல்லாம், என் அன்புள்ள அம்மாவும் நான் பெற்றுள்ள இஸ்லாமிய அறிவைப் பெற வேண்டும் என அவாவுற்றேன்.

ஆனால், அவர்களோ 'இந்தத் தவறான பாதையி லிருந்து' என்னை மீட்டெடுக்கத் தவியாய்த் தவித்தார். அவர் என் மீது செலுத்திய வரையறையற்ற பிள்ளைப் பாசத் தின் காரணமாக என்னை வெறுப்புடன் நோக்கா விட்டாலும் என் போக்கை வெறுப்புடன் நோக்கலானார்.

அவர் வேதனையுடன் இருந்தது உண்மைதான். அது இயற்கையானதே. என்றாலும் அவருக்கு இஸ்லாத்தைப் பற்றிய தெளிவான விளக்கம் இருக்கவில்லை.

முஸ்லிம்களுள் அனேகரின் வாழ்வு இஸ்லாத்திற்கு மாறாக இருப்பதும், அவர்கள் இஸ்லாத்தைப் பற்றித் தவறான கருத்துக்கள் கொண்டிருப்பதுடன் அந்நியரின் வெறுப்புக்குரிய விதத்தில் வாழ்வதும் அவருக்கு முஸ்லிம்களைப் பற்றி, தவறான எண்ணத்தை ஏற்படுத்தி இருக்கலாம். சிலவேளை, மற்றவர்களால் இத்தகைய தவறான எண்ணங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கவும் முடியும். அது பற்றி என் கடிதத்தைப் படிக்கும் நீங்கள் விளங்கிக் கொள்வீர்கள் என நினைக்கின்றேன்.

நானோ, என்னால் முடிந்த அளவு முயன்று இக்கருத்துக்கள் தவறானவை என்பதை எடுத்துக் காட்டியுள்ளேன்; இஸ்லாம் என்றால் என்ன என்பதை சில வேளைகளில் நேரடியாகவும், வேறு சந்தர்ப்பங்களில் கடிதங்கள் மூலமாகவும் விளக்கிக் கூற முயன்றுள்ளேன்.

நான் பிறந்தபொழுது வழமையான சம்பிரதாயப்படி எமது குடும்ப சோதிடர் என் கையைப் பார்த்து, என் எதிர்காலம் எவ்வாறு இருக்கப் போகின்றது என அம்மாவிடம் கூறினார். அவ்வாறு கூறியவற்றுள் ஒன்று ''உங்களது இந்த மகன் எதிர்காலத்தில் உங்களை விட்டுப் பிரிந்து விடுவார்'' என்பது. எனவே, நான் இஸ்லாத்தைத் தழுவியதன் மூலம் சோதிடர் கூற்று உண்மை ஆகிவிட்டது என அவர் நம்பிவிட்டார்.

இது அவரது நம்பிக்கையாக மட்டும் இருக்கவில்லை. "சோதிடர் கூறியது உண்மையாகி விட்டது பார்த்தாயா?" என்று அடிக்கடி கூறவும், கடிதங்களில் குறிப்பிடவும் முற்பட்டார்.

''இஸ்லாத்தில் எத்தகைய சிறப்பும் இல்லை; குறிப்பிடத்தக்க நற்பயனும் இல்லை; ஏதாவது சிறப்பையோ பயனையோ கண்டு என் மகன் இஸ்லாத்தை ஏற்கவும் இல்லை. மௌலானா செய்யத் ஹாமித் (ஜமாஅதே இஸ்லாமியின் பொதுச் செயலாளர்) என் மகனைத் தவறான வழியில் அழைத்துச் சென்றுவிட்டார்."

- இத்தகைய எண்ணங்கள் என் தாயின் உள்ளத்தில் ஆழமாக வேர்பிடித்திருந்தன.

நான் இக்கடிதத்தின் மூலம் அந்தத் தவறான கருத்துக்களை நீக்க முயன்றுள்ளேன். அதோடு இஸ்லாத்தின்பால் வருமாறு அழைப்பும் விடுத்துள்ளேன்.

இதன் மூலம் இஸ்லாத்தின் நற்பெயரை பாதுகாக்க முடியும்; அம்மாவையும் நரக நெருப்பிலிருந்து காத்துக்கொள்ள முடியும் என்பன என் இலட்சியங்களாக இருந்தன.

இக் கடிதத்தைப் படித்தபின் என் தாயின் எதிர்ப்பு குறைந்தது என்னவோ உண்மைதான். எனினும், அவர் இருக்கும் மதத்திலிருந்து விடுபட்டுவரும் அளவுக்கு அவரிடம் தைரியம் இருக்கவில்லை.

நானும் என் முயற்சிகளைக் கைவிடவில்லை. அவற்றோடு மேலதிகமாக, 'அவரது உள்ளத்தை சத்தியத்தின்பால் திறந்து விடுவாயாக; அதை ஏற்கும் மனப்பாங்கைக் கொடுத்தருள்வாயாக!' என அல்லாஹ்விடம் பிரார்த்தனையும் புரியலானேன்.

இக்கடிதம் எழுதி மூன்றாண்டுகள் கழிந்து விட்டன. ஒருநாள், அல்லாஹ்வின் அருளால் அம்மாவின் இதயக் கதவு திறந்து கொண்டது. அவர் இஸ்லாத்தை ஏற்று சத்தியப் பாதையில் தன் பயணத்தை ஆரம்பித்தார்.

முன்னர், அவர் கொண்டிருந்த முரண்டுத்தனமான போக்கிற்காக இப்பொழுது இறைவனிடம் இருகரமேந்தி மன்னிப்பைக் கோருகின்றார். இஸ்லாத்தின் போதனைகளுக்கமைய தன்னை முழுமையாக மாற்றி அமைத்துக் கொண்டார். அல் குர்ஆனின் ஹிந்தி மொழிபெயர்ப்பை மூன்று முறை முழுமையாக படித்து விளங்கும் அளவுக்கு அதனுடன் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இது குறித்து நான் ஆயிரமாயிரம் முறைகள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகின்றேன்.

பொது மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும் என்ற உணர்வுடன் தூய இஸ்லாத்தைப் பற்றிய இக்கடிதத் தொகுப்பை பிரசுரித்து வெளியிட நாடி நின்றேன். சத்தியத்தில் ஆர்வங்கொண்ட மக்கள் இதைப் படித்து பயன் பெறுவார்களாயின் அதுவே என் மன நிறைவுக்குரியதாய் இருக்கும்.

ஆமீன்!

*அன்புள்ள*

*நஸீம் காஜி*

*(முன்னாள் ஹேம்குமார் அகர்வால்)*

*1353, சிட்லி கபர்,*

*டில்லி - 110006.*

*22.02.1980.*

# ஒரு நபித் தோழரின் வாழ்வில்.....

அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் இஸ்லாத்தை நன்கு விளங்கி ஏற்றுக் கொண்டவர். தான் பெற்ற சத்தியத்தின் விளக்கத்தை ம ற்றாரும் பெற வேண்டும் - குறிப்பாக, தன் தாய் பெற வேண்டும் என்பது அவரது தணியாத ஆவல். அதற்காக அவர் மேற்கொண்ட முயற்சிகள் பல; பிரார்த்தனைகள் பல!

எனினும் அவரது அன்னையோ எதையும் ஏற்க மறுத்து விட்டார். அதற்காக, அவரும் தனது முயற்சிகளைக் கைவிடவில்லை.

ஒருமுறை, அவர் தனது தாய்க்கு இஸ்லாத்தை விளக்கிக் கூறிக் கொண்டிருந்த பொழுது, கோபமுற்ற அவரது தாயார் நபி (ஸல்) அவர்களை நிந்திக்க ஆரம்பித்து விட்டார். அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் இதனால் பெரிதும் வேதனையுற்றார். நபிகளாரை சந்தித்து, விவரங்களைக் கூறி, தன் தாய்க்காக அல்லாஹ்விடம் பிரார்த்தனைப் புரியுமாறு வேண்டி நின்றார்.

*"யா அல்லாஹ்! அபூ ஹுரைராவின் அன்னைக்கு நேரான வழியைக் காட்டியருள்வாயாக!"*

என்று நபி (ஸல்) அவர்கள் பிரார்த்தனை புரிந்தார்கள்.

நபி (ஸல்) அவர்களின் பிரார்த்தனை அல்லாஹ்விடம் ஏற்கப்படும் என்பதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் திடமாக நம்பினார்கள். அந்த உறுதியான நம்பிக்கையுடன் அவர் தன் வீடு நோக்கி நடந்தார்.

வீடு பூட்டிக் கிடந்தது!

அபூ ஹுரைரா (ரலி) அவர்களின் காலடிச் சத்தத்தைக் கேட்ட அவரது தாயார், தான் குளித்துக் கொண்டிருப்பதாகவும், சற்று நேரம் வெளியே தாமதிக்கும் படியும் கூறினார்.

சற்று நேரத்தில் வீட்டின் கதவு திறந்து கொண்டது. அதோடு, தன் தாயின் உளக் கதவும் இஸ்லாத்திற்காக திறக்கப்பட்டிருப்பதைக் கண்ட அவர் இன்புற்றார்; இறைவனுக்கு நன்றி செலுத்தினார்.

அந்த அம்மையார் தூய கலிமாவை மொழிந்து இஸ்லாத்தைத் தனதாக்கிக் கொண்டார்.

அபூஹுரைரா (ரலி) அவர்களுக்கு இருப்பு கொள்ளவில்லை. அந்த நல்ல செய்தியை ஓடோடிச் சென்று அல்லாஹ்வின் தூதரிடம் கூற வேண்டும் என ஆவல் கொண்டார். அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் அதுபற்றி கூறியபொழுது, அவர்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தினார்கள்.

அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் மற்றாரின் அன்னையர்க்கும் அடிக்கடி பிரார்த்தனைப் புரிபவர்களாக இருந்தார்கள்.

*- நபி (ஸல்) அவர்களின் வரலாற்று நூலிலிருந்து.*

*நேர்வழியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டவர்கள் மீது அல்லாஹ்வின் பேரருள் பொழியுமாக!*

# *அன்பே உருவான அம்மா....!*

அல்லாஹ்வுடைய அருளும் பாதுகாப்பும் கிடைத்து நீங்கள் நல்ல சுகமாய் இருப்பீர்கள் என்று நம்புகிறேன். நீங்கள் எழுதிய அன்புக் கடிதம் என் கரம் கிட்டியது. எனினும் தவிர்க்க முடியாத சில காரணங்களால் அதற்கு பதில் எழுத தாமதித்து விட்டேன். எல்லாவற்றிற்கும் முன்னர் அதற்காக நான் உங்களிடம் மன்னிப்புக கோருகின்றேன்.

நீங்கள் என்னைப் பற்றி கொண்டுள்ள எண்ணமும், என் நலனில் கொண்டுள்ள அக்கறையும் மகத்தானவை. அதேபோன்று, நான் என்னுள்ளத்தில் தேக்கி வைத்துள்ள உங்கள் மீதான அன்பும், பாசமும் வார்த்தைகளில் வடித்துக் கூற முடியாதவை.

உங்கள் அன்பு நிறைந்த முகத்தைக் காண ஓடோடி வர வேண்டும் என என்னுள்ளம் அவாவுறுகின்றது. எனினும், நான் பெற்றுவரும் சன்மார்க்கக் கல்வி என்னைத் தடுத்து நிறுத்துகின்றது. இந்தத் தடை இல்லாவிட்டால் நான் ஒரு கணமும் உங்களை விட்டுப் பிரிந்திருக்க மாட்டேன். உண்மையில், மார்க்கத்தைக் கற்பதன் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் நான் உணர்ந்திருப்பதுதான், நான் உங்களைப் பிரிந்திருப்பதை சகித்துக்கொள்ளச் செய்கின்றது. இருப்பினும் உங்களைப் பற்றிய நினைவால் என் நெஞ்சம் நிறைந்திருக்கின்றது. நான் கழிக்கும்

ஒவ்வொரு நிமிடத்திலும் நீங்கள் என்மீது வைத்துள்ள வரையறையற்ற அன்பை, கருணையை எண்ணிப்பார்க்கின்றேன்.

நீங்கள் என்மீது செலுத்தும் அளவற்ற கருணைக்கும், எனக்காகக் காலமெல்லாம் செய்த தியாகங்களுக்கும் நான் எப்படித்தான் கைம்மாறு செய்வேனோ? உங்கள் தன்னலமற்ற உதவி ஒத்தாசைகளை என் நாவினால் எப்படித்தான் வர்ணித்து முடிப்பேனோ? உங்கள் முடிவேயில்லாத அன்புடன் கூடிய மகத்தான பணிகளுக்கு எந்த விதத்தில் பிரதி உபகாரம் செய்வேனோ? நான் அறியேன்!

என் அகம் நிறைந்த அம்மா!

நீங்கள் எப்பொழுதும் வேதனையுடனும் வடித்த கண்ணீருடனும் சொல்லும் சில விடயங்கள் என் உள்ளத்தில் சதா எதிரொலித்துக் கொண்டுள்ளன. அவற்றிற்காக நான் கவலைப் படாத நாளே இல்லை எனலாம்.

நீங்கள் கூறுவீர்கள்:

"என் தங்க மகன் என்னை விட்டுப் போய்விட்டான்; தவறான பதையின்பால் அழைத்துச் செல்லப்பட்டு விட்டான். சோதிடர் கூறியது போலவே என் மகன் எனக்கு இல்லாமலாகி விட்டான்." என்று.

அம்மா! இவற்றை நான் எப்பொழுதும் நினைத்துப் பார்க்கின்றேன். ஏனம்மா இப்படி என்னைப் பற்றி வேதனைப் படுகின்றீர்கள்? எனது எந்தச் செயல் உங்களுக்கு இப்படியான வருத்தத்தைத் தருகின்றது? இப்படி அச்சத்தைத் தோற்றுவிக்கின்றது? இப்படி பலமுறை எண்ணிப் பார்த்தது உண்டு.

சொல்லுங்கள் தாயே! நான் செய்த குற்றம் என்ன?

- 'அல்லாஹ் ஒருவன்தான் உண்மையான படைப்பாளன்' என்று நான் ஏற்றுக் கொண்டது குற்றமா?

- இறுதி நபிகளார் மீது இறுக்கமான விசுவாசங் கொண்டேனே, அது நான் செய்த குற்றமா?

- என் வாழ்வு முழுவதையும் இறை கட்டளைக்கு இணக்கமான முறையில் அமைத்துக்கொள்ள விழைந்தேனே, அதுதான் என் குற்றமா?

- 'அல்லாஹ்வைப் புகழ்கின்றேன்; அவனுக்கு இணையான எதுவுமே இல்லை' என நான் உறுதியான இறை விசுவாசம் கொண்டதுதான் என் குற்றமா?

இல்லையெனில்,

- 'எமக்கு உணவளித்து வாழ வைக்கும் இறைவன் அந்த அல்லாஹ்தான்' என மனப்பூர்வமாக ஏற்றேனே, அதுதான் நான் செய்துவிட்ட உங்கள் மனதைக் குடையும் குற்றமா?

அன்புத் தாயே! இந்த வாழ்வு, இதில் காணப்படும் எண்ணற்ற வசதிகள், காற்று, நீர், உணவு, உடை ஆகிய அனைத்துமே அல்லாஹ்வின் அருட்கொடைகள். நிச்சயமாக இந்த வாழ்வும் உலகமும் என்றோ அழிந்து விடும். இப்படி அழிந்து போகும் எம்மை, அல்லாஹ் மீண்டும் உயிர்தந்து எழச் செய்வான். எமக்கு இவ்வுலகில் வாழும் வாய்ப்பைத் தந்த அவனுக்கு 'நாம் எப்படி வாழ்ந்தோம்' எனக் கேட்கும் உரிமை உண்டு என்பதை நான் திடமாக நம்புகின்றேன்.

அவன் தந்த சட்ட திட்டங்களுக்கும் வாழ்க்கை முறைக்கும் ஏற்ப வாழாதவர்கள் நரகில் எறியப்படுவர்; அங்கு அவர்கள் மிகக் கடுமையான வேதனைகளை அனுபவிப்பர். இந்த உண்மைகள் யாவற்றையும் எத்தகைய

கிலேசமுமின்றி முழு மனதோடு ஏற்றுக் கொண்டது நான் செய்த குற்றமா?

- 'நரக நெருப்புக்கு இரையாகாது இறை சட்டங்களுக்கு ஏற்ப இயங்கி சுவனத்தைப் பெற வேண்டும்' என உறுதிபூண்டு செயற்படுகின்றேனே - இது குற்றமா?

- 'எல்லாவற்றையும் படைத்து பரிபாலித்து வரும் அல்லாஹ், தனது இறுதித் தூதரான நபி (ஸல்) அவர்கள் மூலம் அருளிய ஆணைகள் யாவற்றையும் நெஞ்சம் நிறைத்து பின்பற்றுவேன்; அவன் 'கூடாது' என தடுத்த பாவச் செயல்களிலிருந்து முற்றாக ஒதுங்கி நிற்பேன்' என்ற முடிவோடு வாழ்வை அமைத்துக் கொள்ள முற்படுகின்றேனே - இதை குற்றம் என்கிறீர்களா?

ஆமாம் தாயே! உங்கள் கண்ணோட்டத்தில் நான் செய்த குற்றங்கள் இவைதான்! உங்களது வேதனைக்கும் வெறுப்பிற்கும் காரணமாகி இருப்பவை இத்தகைய என் குற்றங்களே!

சுருக்கமாகச் சொல்கிறேன்:

உண்மையான இறைவனுக்கு உளப் பூர்வமாக அடிபணிந்து வாழும் ஒரு முஸ்லிமின் வாழ்வுதான் என் வாழ்வு. என் செயல்கள் யாவும் அப்படித்தான் அமைந்துள்ளன. எவர் தனது வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் எல்லாக் கட்டங்களிலும் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு, இணக்கமாக வாழ்கிறாரோ அவர்தான் 'முஸ்லிம்' என அழைக்கப்படுபவர். அதனை நன்கு உணர்ந்தவன் நான். எனவே, இறைவன் 'வேண்டாம்' என தடுத்துள்ள பாவச் செயல்களிலிருந்து நானும் ஒதுங்கி வாழ முயற்சிக்கின்றேன்.

என் அம்மா!

நான் உங்கள் மகன். நான் இஸ்லாத்தை ஏற்குமுன், இஸ்லாமியப் பாதையிலான பயணத்தை ஆரம்பிக்குமுன், எத்தகைய கெட்ட செயல்களை உடையவனாக இருந்தேன் என்பது நீங்கள் அறியாதது அல்ல. திருடுவது, பொய் பேசுவது போன்றவை அப்போது எனக்கு மிகச் சிறிய விஷயங்கள். எந்தக் கணமும் இத்தகைய தீமைகளில் மிக தைரியமாக ஈடுபட பின்வாங்கியது இல்லையே! அந்த அளவுக்கு தீய எண்ணங்கள் என் உள்ளத்தை ஆக்கிரமித்து இருந்தன. என்னுடைய தரங்கெட்ட வார்த்தைகள், தமாஷ்கள், நிந்தனைகள் எத்தனை பேரின் கண்களில் நீர் மல்கச் செய்திருக்கும்?

ஆனால் இன்று, இப்படி ஒரு தீர்மானம் எடுத்ததன் பின்பு, இஸ்லாத்தை என் வாழ்வோடு ஒன்றிவிட்ட மார்க்கமாக ஏற்றதற்குப் பின்னர், இறையொளியால் என் உள்ளம் நிறைந்து காணப்படுகின்றது; பாவ இருள்கள் முற்றாக நீங்கி விட்டுள்ளன.

என்னைப் படைத்த நாயன் 'இவை கெட்டவை' எனத் தடுத்தவற்றை நான் எப்படியம்மா தைரியமாகச் செய்ய முடியும்? அது அவனுடைய கூற்றைப் புறக்கணிக்கும் கொடிய குற்றமல்லவா?

அன்புள்ள என் அம்மா!

நான் தேர்ந்தெடுத்த வாழ்க்கை முறைக்குப் பெயர் இஸ்லாம். அது முழு மனித சமுதாயத்திற்கும் அல்லாஹ்வால் அருளப் பெற்றது. அதில் எத்தகைய குறையும் இல்லை. மனிதனின் முழு வாழ்வுக்கும் அவசியமான அத்தனை சட்டதிட்டங்களும் அதில் அடங்கியுள்ளன.

ஒரு மனிதன் -

- எப்படி வாழ்வது

- எப்படி வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவது

- மற்றவர்களுடன் நெருங்கிப் பழகும் பொழுது ஏற்படும் பிரச்சினைகளை எவ்வாறு தீர்த்துக் கொள்வது.

- அரசியலில் எவ்வாறு ஈடுபடுவது

- ஓர் ஆட்சியை எவ்வாறு நடத்திச் செல்வது

- வாழ்வில் எத்தகைய பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிப்பது.

- எவ்வாறு உண்பது, உழைப்பது, திருமணம் புரிவது

இப்படிப் போன்ற எல்லா விடயங்களிலும் இஸ்லாம் முன் வைக்கும் இறையாணைகள் பொருத்தமான வழிவகைகளை நமக்குக் காட்டித் தருகின்றன.

இன்னும் கேளுங்கள் அம்மா!

இஸ்லாம், மனிதர்கள் தமது பெற்றோர், சகோதர சகோதரிகள், கணவன், மனைவி, அயல் வீட்டவர், உற்றார் உறவினர், நண்பர்கள் மற்றும் உள்ளோருடன் எவ்வாறு நடந்து கொள்வது என்பதையும் சொல்லித் தருகின்றது; நபி (ஸல்) அவர்கள் நடந்து காண்பித்து விட்டுச் சென்றார்கள்.

நான் இப்பொழுது வல்லமையும், அன்பும், கருணையும் உடைய அல்லாஹ்வின் ஆணைகளை சிரமேற்கொண்டு, அவன் விருப்பப்படி வாழ திடசங்கற்பம் பூண்டுள்ளேன். அந்த வகையில், பெற்றோருடன் எவ்வாறு நடந்து கொள்வது என்பது பற்றிய அவனது வழிகாட்டல் என்ன என அறிய விழைந்து, அவற்றிற்கமைய நடந்து கொள்கிறேன்.

அல்லாஹ்வும், அவனது இறுதித் தூதர் (ஸல்) அவர்களும், பெற்றோருடன் எவ்வாறு நடந்து கொள்வது? அவர்களுக்கு எவ்வாறு மரியாதை செய்வது என்பன பற்றி

என்ன மொழிந்துள்ளனர் என உங்களுக்குத் தெளிவுபடுத்த விழைகின்றேன்.

வல்லமைமிக்க அல்லாஹ் தனது பரிசுத்த குர்ஆனில் பெற்றோருக்குப் பணிந்து நடப்பது பற்றி பெருமளவு குறிப்பிட்டுள்ளான்.

''பெற்றோருடன் பேணுதலாக நடந்து கொள்ளுங்கள்; அவர்களைத் துன்புறுத்தாதீர்கள்; அவர்கள் கூறுபவற்றை மிக்க மரியாதையுடன் செவிமடுங்கள்; அவர்கள் செய்த உதவிகளுக்கு நன்றி செலுத்துங்கள்'' என்பன அவற்றுள் சில.

முஹம்மத் (ஸல்) அவர்கள் பெற்றோருக்குக் கண்ணியம் அளிப்பது பற்றி மொழிந்தவை இவ்விறை போதனைகளுக்கு முற்றிலும் இணக்கமானவை.

ஒருமுறை, ஒருவர் வந்து, ''யா ரஸூலுல்லாஹ்! அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான செயல் எது?'' என்று நபி (ஸல்) அவர்களிடம் வினவினார்.

''உரிய வேளையில் தொழுவது!'' என நபி (ஸல்) அவர்கள் பதில் மொழிந்தார்கள்.

''அதற்கு அடுத்த, அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான செயல் எது?'' என மீண்டும் அவர் வினவினார்.

''பெற்றோருடன் கண்ணியமாக நடந்து கொள்ளல்!'' என அல்லாஹ்வின் தூதர் பதில் மொழிந்தார்கள்.

மற்றொரு முறை, வேறொருவர் வந்து நபி (ஸல்) அவர்களைச் சந்தித்து, ''யா ரஸூலுல்லாஹ்! தாய் நாட்டையும் பிறந்தகத்தையும் விட்டுவிட்டு அல்லாஹ்வுக்காகப் புனிதப் போரில் ஈடுபடுவதாக உங்கள் கரங்களில் சத்தியம் செய்கிறேன். அதற்கான வெகுமதிகளை அவனிடம் மட்டுமே எதிர்பார்க்கின்றேன்'' எனக் கூறினார்.

இதை அவதானமாகக் கேட்டுக் கொண்டிருந்த நபி (ஸல்) அவர்கள் மிக அமைதியாக, ''உங்கள் பெற்றோர் இருக்கின்றனரா?'' எனக் கேட்டார்கள்.

அதற்கவர், ''அல்லாஹ்வின் அருளால் அவ்விருவரும் நலமாக இருக்கின்றனர்'' என பதில் அளித்தார்.

''அப்படியா? நீங்கள் அவர்களுக்குப் பணிவிடை செய்யுங்கள். அப்பணிவிடைகளாவன அல்லாஹ்வுக்காக ஹிஜ்ரத்தும்* ஜிஹாதும்** செய்த நன்மையை அவனிடமிருந்து பெற்றுத் தரும்'' என்பது ரஸூல் (ஸல்) அவர்கள் அளித்த விளக்கமாக இருந்தது.

நபி (ஸல்) அவர்கள் மொழிந்தார்கள்:

***''உங்கள் சுவனமும் நரகமும் உங்கள் பெற்றோரின் பாதத்தடியில்தான்!'' என்று.***

இந்த நபிமொழியின் கருத்து இதுதான்:

தமது பெற்றோருக்கு அடிபணிந்து, அவர்களுக்குப் பணிவிடைப் புரிந்து, அவர்கள் செய்த உதவி ஒத்தாசைகளுக்கு நன்றி பகர்ந்து, அவர்களுக்கு நல்லன செய்தால் சுவனம் கிட்டும். அவ்வாறின்றி, அவர்களைத் துன்புறுத்தி, தொல்லைகள் பல கொடுத்து வாழும் ஒருவர், நரகில் கொழுந்து விட்டெரியும் நெருப்புக்கு இரையாவார் என்பதாகும்.

பிள்ளைகள் தம் பெற்றோருடன் மிக நல்ல விதமாக நடந்து கொள்ளல் வேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் பல கட்டங்களில் மொழிந்துள்ளார்கள்.

---

*★ ஹிஜ்ரத் - அல்லாஹ்வுக்காக தான் வாழுமிடத்தைத் துறந்து செல்வது.*

*★ ★ ஜிஹாத் - அல்லாஹ்வுக்காகப் புனிதப் போரில் ஈடுபடுவது.*

அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

إِمَّا يَبْلُغَنَّ عِندَكَ ٱلْكِبَرَ أَحَدُهُمَآ أَوْ كِلَاهُمَا فَلَا تَقُل لَّهُمَآ أُفٍّ

*''அவ்விருவரில் ஒருவரோ அல்லது அவர்கள் இருவருமோ உம்மிடத்தில் நிச்சயமாக முதுமை அடைந்து விட்டால், அவர்களை 'உஃப்' (சீ) என்று (சடைந்தும்) சொல்ல வேண்டாம்.''*

*(அல் குர்ஆன் 17: 23)*

அன்புத் தாயே!

அல்லாஹ் என்ன கூறுகின்றான் என்பதைக் கவனித்தீர்களா? தாயையோ தந்தையையோ அடித்துத் துன்புறுத்துவது, மிகவும் வெறுக்கத்தக்க முறையில் பேசுவது என்பன எப்படிப் போனாலும், அவர்களுடைய மனதுக்கு வருத்தத்தைத் தரும் மிகச் சிறிய சொல்லொன்றைக்கூட பேச வேண்டாம் என்பது இறைவன் இடும் கட்டளையாகும்.

''சில வேளை உங்களுக்குத் திருப்தியைத் தராத ஏதேனும் சொற்கள் உங்கள் பெற்றோரின் நாவிலிருந்து வெளிப்பட்டால் கூட நீங்கள் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். அவ்வாறின்றி, அவர்களைக் கோபமுறச் செய்யாதீர்கள். எப்பொழுதும் அவர்கள் திருப்தியுடன் இருக்க வழி செய்யுங்கள்'' என்பன போன்ற கட்டளைகளும் இறைவனிடத்திலிருந்து வந்துள்ளன.

நபி (ஸல்) அவர்கள் மொழிந்தார்கள்:

*''அல்லாஹ்வின் திருப்தி தந்தையின் திருப்தியில் தங்கி இருக்கின்றது; அதுபோல, அல்லாஹ்வின் கோபம் தந்தையின் வெறுப்பில் தங்கியிருக்கின்றது.''*

அன்பே உருவான தந்தைக்குக் கீழ்ப்படிந்து, அவரது சொற்படி நடந்து, அவருக்குத் திருப்தியை அளித்தால் அல்லாஹ்வும் திருப்தியுறுவான். தந்தைக்குக் கீழ்ப்படியாது, அவரது அன்புக் கட்டளைகளைப் புறக்கணித்து, தான்தோன்றித்தனமாக நடந்து கொண்டால் அவருக்குக் கோபமும் வெறுப்பும் ஏற்படும். அது அல்லாஹ்வின் வெறுப்பைத் தேடித் தரலாம்.

நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

*''யாரேனும் ஒருவர் தனது பெற்றோருக்குப் பணிவிடை புரிந்தால் அவருக்கு ஈருலக நன்மைகள் கிடைக்கும்; பெற்றோருக்கு உதவுவதால் அவரது ஆயுள் நீடிக்கும்; உணவில் அபிவிருத்தி ஏற்படும்.''*

இதிலிருந்து பெற்றோருக்குப் பணிவிடைப் புரிந்து வருவது எத்தகைய பாரிய பொறுப்பு என்பதை நாம் உணரலாம். அவர்களை மிகுந்த இரக்கத்துடன் பார்ப்பதும், உதவி ஒத்தாசை புரிந்து இன்புறச் செய்வதும் பிள்ளைகளின் கடமையாகும்.

ஒருமுறை நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு மொழிந்தார்கள்:

*''பெற்றோருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்கள் ஏதேனும் பணியொன்றினை ஆரம்பிக்கும் பொழுது, அது எத்தகையதாயினும் பெற்றோரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுங்கள்; நீங்கள் அவர்களுடன் இணக்கமாக இருப்பீர்களாயின், அது உங்களுக்கான சுவன வாசலைத் திறந்து கொள்வதற்கான ஓர் அம்சமாக இருக்கும்.''*

மற்றொரு முறை நபி (ஸல்) அவர்கள் மொழிந்ததாவது:

*“ஒருவர் மனப்பூர்வமாகப் பெற்றோருக்குப் பணிந்து நடந்தால், அவருக்காக சுவனவாசல் திறந்திருக்கும்; பெற்றோரின் சொல்லுக்கு மரியாதைத் தராது பணிவின்றி நடப்போர் நரகுக்குச் செல்லத் தயாராக வேண்டும்.”*

‘‘பெற்றோருடன் மிக நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள்; அவர்களை அவமரியாதையாகவோ நிந்தனையாகவோ பேசாதீர்கள்; அவர்கள் எதிரில் மிகுந்த பணிவன்புடன் கண்ணியமாகக் காரியமாற்றுங்கள்; அவர்கள் மத்தியில் நீங்கள் பெரிய மனிதராகப் பார்க்காதீர்கள்’’ என்பன இறைமறை வடித்துத் தரும் இனிய கருத்துக்கள்.

நபி (ஸல்) அவர்களின் நண்பர்களுள் ஒருவரான கீர்த்திமிக்க ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது நண்பர்களை விளித்துக் கூறினார்கள்:

***“உங்கள் தாயுடன் மிகப் பணிவுடன் பேசுவதும், அவருடைய உணவுத் தேவையைக் கவனிப்பதும் உங்களுக்குச் சுவனத்தைச் சொந்தமாக்கிவிடும். ஆனால், ஒரு நிபந்தனை - நீங்கள் பாவச் செயல்களில் ஈடுபடாது இருக்க வேண்டும்.”***

நபி (ஸல்) அவர்களின் மற்றுமொரு முக்கிய நண்பரான ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் கூறினார்கள்:

***“நீங்கள் உங்கள் தந்தையின் பெயர் சொல்லி அழைக்காதீர்கள்; அவருக்கு முன் நடக்காதீர்கள்; அவர் அமருமுன் அமராதீர்கள்.”***

நபி (ஸல்) அவர்கள் பெற்றோர் மீது கருணை காட்டுவதன் அவசியம் பற்றி வெகுவாக எடுத்துரைத்துள்ளார்கள்.

அதே போல மற்றும் பலரும் பல்வேறு கட்டங்களில் பெற்றோருக்குக் கண்ணியம் அளித்தல், கருணை காட்டல், அவர்கள் மீது இரக்கம் கொள்ளுதல் பற்றி கூறிய கருத்துக்கள் ஏராளமுண்டு.

''நல்ல பிள்ளைகள் தம் பெற்றோரை நிறைந்த அன்புடன் நோக்குவதும் கூட பரிபூரணமான ஹஜ் ஒன்றை செய்த நன்மையை அல்லாஹ்விடம் இருந்து பெற்றுத்தர வல்லதாகவுள்ளது. ஒருவரின் சொத்து சுகம் என்பவற்றின் மூல சொந்தக்காரர்கள் அவரின் பெற்றோர் ஆவார்கள்'' என்பன இஸ்லாம் முன்வைக்கும் இதமான கருத்துக்களாகும்.

மனிதன் தனது சொத்து செல்வங்களைப் பல வழிகளில் செலவு செய்கிறான். அந்த செல்வங்கள் அனைத்திற்கும் மூலச் சொந்தக்காரர்கள் பெற்றோரே. எனவே, அவற்றின் மூலம் முதலில் பெற்றோரின் தேவைகளே கவனிக்கப்பட வேண்டும். அதற்கு அடுத்துத்தான் மற்றவைகள் தொடர்பான செலவுகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒருவர் தனது பெற்றோருக்காக திறந்த மனதுடனும் ஆர்வத்துடனும் செலவழித்தல் அவசியம்; அதில் கஞ்சத்தனம் வரவே கூடாது.

என்னுயிர் அம்மா!

நபி (ஸல்) அவர்கள் காலத்தில் நிகழ்ந்த நெஞ்சை நெகிழ வைக்கும் நிகழ்ச்சி ஒன்றினைக் கேளுங்கள்:

ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களைச் சந்தித்து,

''யா ரஸூலுல்லாஹ்! என் தந்தை நினைக்கும் பொழுதெல்லாம் வந்து எனது செல்வத்திலிருந்து எடுத்துச் செல்கின்றார்!''

என்று முறையிட்டார். இதைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள், அவரது தந்தையை அழைத்து வரும் படி

பணித்தார்கள். சற்று நேரத்தில் அவரது தந்தை அழைத்து வரப்பட்டார். ஊன்று கோலின் உதவியுடன் வந்த அவர் முதிய வயதை உடையவர்.

அவர் வந்தவுடன் அவரது மகனின் முறையீடு பற்றி நபி (ஸல்) அவர்கள் விசாரித்தார்கள். அப்பொழுது அந்த முதியவர்:

''யா ரஸூலுல்லாஹ்! ஒரு காலத்தில் எனது இந்த மகன் அனாதரவாக, எத்தகைய உதவிக்கும் வழியின்றி இருந்தார். அப்பொழுது நான் நல்ல சரீர சுகத்துடனும் செல்வத்துடனும் இருந்தேன். என் செல்வத்திலிருந்து இவருக்கு உதவி ஒத்தாசைப் புரிவதை நான் தடுத்துக் கொள்ளவில்லை. இன்று இவர் ஒரு செல்வந்தர். எனினும், இவர் தனது செல்வத்தின் மூலம் எனக்கு உதவுவதிலிருந்து என்னை ஒதுக்கி வைக்கின்றார்'' என்று வேதனை ததும்ப, தன் பரிதாப நிலையை விவரித்தார்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த நபி (ஸல்) அவர்களின் கண்கள் கலங்கி விட்டன. அவர்கள் அந்த வயோதிபரின் மகனை விளித்து:

நீங்களும் நீங்கள் பெற்றுள்ள செல்வமும், ஆகிய எல்லாமே உங்கள் தந்தைக்குரியன!''

என்றார்கள்.

நபி (ஸல்) அவர்களின் இக்கூற்றிலிருந்து நாம் பல விடயங்களைப் புரிந்துகொள்ள முடியும். உண்மையில், மனிதனின் சொத்து, செல்வம், திறமைகள் என்பனவெல்லாம் பெற்றோரின் பெரும் தியாகத்தின் விளைவுகளே என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

இதன்படி பிள்ளைகளும் அவர்களது செல்வங்களும் அவர்களின் தந்தைக்குரியன. எனவே, தந்தையின் சொற்படியே அவர்கள் செயற்பட வேண்டும். அவர்களது

செல்வத்தைத் தந்தை அனுபவிப்பதை ஒருபோதும் தடுக்கக் கூடாது. அது மிகவும் தகாத செயலாகும். மேலும், பெற்றோருக்கு நன்மை நாடி பிரார்த்தனை செய்வதை இஸ்லாம் வெகுவாகக் கூறியுள்ளது.

அல்லாஹ் கூறுகின்றான்:

وَاخْفِضْ لَهُمَا جَنَاحَ الذُّلِّ مِنَ الرَّحْمَةِ وَقُل رَّبِّ ارْحَمْهُمَا كَمَا رَبَّيَانِي صَغِيرًا

***"இன்னும், இரக்கம் கொண்டு பணிவு என்னும் இறக்கையை அவ்விருவருக்காகவும் நீர் தாழ்த்துவீராக: மேலும், "என் இறைவனே! நான் சிறு பிள்ளையாக இருந்தபோது, என்னை (ப் பரிவோடு) அவ்விருவரும் வளர்த்தது போல், நீயும் அவர்களிருவருக்கும் கிருபை செய்வாயாக!" என்றும் கூறிப் பிரார்த்திப்பீராக!"***

***(அல் குர்ஆன் 17: 24)***

என் அகம் நிறைந்த அம்மா!

ஒரு தந்தையைவிட தாய் பல கஷ்டங்களை அனுபவிப்பவர்; எமக்காக எப்பொழுதும் தியாகத்துடன் பணி புரிபவர். எனவே, எல்லா வகையான கண்ணியங்களுக்கும் உரிய முதலாமவராக, அவரைக் கருதுவது அவசியம் அல்லவா!

அல் குர்ஆனும் நபிகளார் அறவுரைகளும் இது பற்றிய மிகத் தெளிவான விளக்கங்களைத் தருகின்றன.

*"தந்தைக்காக செய்யும் பணிவிடைகளை விட தாய்க்காக செய்யும் பணிவிடைகள் மிக சிறப்பானது!"*

என ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் பகர்ந்தார்கள்.

ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து,

“யா ரஸூலுல்லாஹ்! நான் அடிபணிந்து நிற்பதற்கும் மற்றவர்களை விடவும் சிறப்பானவராகக் கருதுவதற்கும் உரியவர் யார்?” எனக் கேட்டார்.

“உங்கள் தாய்!” என நபி (ஸல்) அவர்கள் மொழிந்தார்கள்.

“அதன் பின் யார்?” அவர் மீண்டும் கேட்டார்.

“உங்கள் தாய்!” மீண்டும் அதே பதில் வந்தது.

“அதன் பின் யார்” வந்தவர் மீண்டும் கேட்டார்.

“உங்கள் தாய்தான்!” நபி (ஸல்) அவர்கள் நாவிலிருந்து பதில் வந்தது. நான்காவது முறையாக, “அடுத்தவர் யார்?” எனக் கேட்ட பொழுது, “உங்கள் தந்தை!” என்றார்கள் நபி (ஸல்) அவர்கள்.

மற்றொரு முறை,

***“தாயின் பாதத்தடியில் சேயின் சுவனம் உண்டு!”***

என நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள். பெற்று வளர்த்து ஆளாக்கிய அன்னைக்கு அன்புடன் பணிவிடை செய்து, அவரை மிக நல்ல முறையில் கவனித்து வந்தால் உங்களுக்கு சுவன பாக்கியம் கிட்டும் என்பது இதன் கருத்து. இத்தகைய எண்ணற்ற போதனைகள் தாய்க்குப் பணிவிடை செய்வதை பெரும் கடமை எனக் கூறி நிற்கின்றன.

பெற்றோரில் ஒருவரோ இருவருமோ மரணித்து விட்டால், அவர்களுக்காக இறைவனிடம் பிரார்த்தனைப் புரிய வேண்டும். அவர்களது பாவங்கள் மனிக்கப்படுவதற்கும், அவர்களுக்கு மறுவுலக இன்பங்கள் கிட்டுவதற்கும் அல்லாஹ்விடம் பிரார்த்தனைப் புரிய வேண்டும் என்பது இறை தூதரின் இதயம் நிறைந்த கட்டளை.

பெற்றோருக்கு கண்ணியமளித்து, மிகுந்த கீழ்ப்படிவுடன் நடந்து, அவர்கள் வயது முதிர்ந்துவிட்டால், அவர்களைத் திருப்தி படுத்தும் விதத்தில் பணிவிடைப் புரிவதை அல்லாஹ் போற்றியுள்ளான்; அப்படி நடந்து கொள்வதைக் கட்டாயப்படுத்தியுள்ளான்.

ஆனால், ஒரு முக்கிய விடயம்:

***அல்லாஹ் தடுத்துள்ள, 'செய்யக் கூடாது' என விலக்கியுள்ள எதையும் தமது அன்புப் பெற்றோர் செய்யும்படி பணித்தால், அவற்றைச் செய்யக் கூடாது. அப்படியானவற்றைத் தவிர்த்து நடக்க வேண்டும் என்பதுதான் இறை கட்டளை.***

பெற்றோராயினும் தவறான, (இஸ்லாத்திற்கு) முரணான செயல் ஒன்றைச் செய்யும்படி வேண்டினால் எப்படிச் செய்வது? எனினும் அவர்களது (இஸ்லாத்திற்கு முரணில்லாத) நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் தவறு இல்லை. இதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

அன்புத் தாயே!

எம்மைப் படைத்த அல்லாஹ்வும், அவன் தூதரும் எமக்கு எவற்றைச் செய்யும் படி கட்டளை இட்டுள்ளார்களோ, அவற்றை மனப்பூர்வமாக ஏற்றுச் செய்வதற்கு, நான் திடமனம் கொண்டுள்ளதாக முன்னரே கூறிவிட்டேன். பெற்றோரைப் பற்றிய இறையாணைகள் எவையோ அவற்றின்படி அவர்களிடம் நடந்து கொள்வேன். அந்த இறையாணைகள் என்னென்ன என்பதை நான் உங்களுக்கு நன்கு விளக்கிக் கூறியுள்ளேன். அவற்றிற்கமைய என் வாழ்நாள் முழுவதும் அமையும் என உறுதியாகக் கூற விழைகின்றேன்.

இவற்றைப் படித்துவிட்டு நன்கு சிந்தியுங்கள் அம்மா. அப்பொழுது "என் மகன் சொல்வதெல்லாம் உண்மைதான்!" என்று உங்கள் உள்ளுணர்வுகள் உணர்த்துமாயின், எத்தகைய ஐயமுமின்றி கீழ்க்காணும் முடிவுக்கு நீங்கள் வருவீர்கள்.

"என் மகனை மௌலானா தவறான வழியில் இட்டுச் சென்றார் என நான் நினைத்தது தவறு; அவன் எனது மகனல்ல எனக் கூறியதும் தவறு. மாறாக, மௌலானா என் மகனை சரியான மகனாக ஆக்கினார்; அவர் என் மகனைத் தவறான வழியில் இட்டுச் செல்லவில்லை. மாறாக, வாழ்வுக்கான நேரிய வழியைக் காட்டினார். 'இவன் உங்களது ஒரு மகனாக இருக்க மாட்டான்' என அன்று சோதிடர் கூறியது பொய்; தவறு."

ஆமாம் தாயே! நான் கூறியது உண்மை என நீங்கள் விளங்கிக் கொண்டால் மேற்காணும் முடிவுகளுக்கே வருவீர்கள் - இது உறுதி.

கருணையே உருவான அம்மா!

நீங்கள் உறுதியாக நம்புங்கள். நான் என்றென்றும் உங்கள் மகனாகவே இருப்பேன்; எப்பொழுதும் நான் உங்களுக்குச் சொந்தமாவேன். எனவே, உங்கள் உள்ளத்தில் வேர்பிடித்து வாட்டும் வேதனைகளையும், அச்சத்தையும் வேரோடு பிடுங்கி எறிந்து விடுங்கள்.

மனித சமுதாயத்திற்கு நேரான வழியைக் காட்டும் உண்மையான மார்க்கம் இஸ்லாம் ஒன்று மட்டுமே. இது அனைத்தும் அறிந்த அல்லாஹ்வால் அருளப் பெற்றது. மனித வாழ்வுக்கு அவசியமான, அனைத்துத் துறைகளுக்கும் வழிகாட்டக்கூடிய அம்சங்கள், நீதி நெறிமுறைகள் இதில் அடங்கியுள்ளன. ஒரு வேதம் சத்தியமானதா அல்லது அசத்தியமானதா என்பதை

அறிந்து கொள்ள, அந்த வேதத்தின் ஓர் அம்சத்தை மட்டும் ஆய்வுக்குட்படுத்துவது போதுமானது.

இங்கு, பெற்றோர் பற்றிய இஸ்லாத்தின் போதனைகள் என்ன என்பதைச் சுருக்கமாக உங்கள் முன் சமர்ப்பித்துள்ளேன். இவற்றைத் திறந்த மனதுடன் படிக்கும் நீங்கள், இஸ்லாம் எவ்வளவு சிறப்பான மதமொன்று, வாழ்க்கை முறையொன்று என விளங்கிக் கொள்வீர்கள். இது போன்ற பூரணத்துவமும் தெளிவானதுமான மற்றொரு மதம் உண்டா என்றால், 'நிச்சயமாக இத்தகைய விளக்கம் நிறைந்த, நீதி வழி சார்ந்த மற்றொரு மதம் இல்லை!' என்பது உங்கள் முடிவாக இருக்கும் என்பது என் திடமான நம்பிக்கை.

இது போலவே, வாழ்வின் ஒவ்வொரு துறைக்குமான நீதிநெறி முறைகள் இஸ்லாத்தில் இருக்கின்றன. அவை மனித சமுதாயத்திற்கு எப்பொழுதும் நேர்வழியைக் காட்டி நிற்கும்.

என் அன்புத் தாயே!

நீங்கள் என்னை மிகவும் கஷ்டப்பட்டு வளர்த்தீர்கள். அவை ஒன்றிரண்டா? உங்கள் கருவறையில் என்னை சில மாதங்கள் சுமந்திருந்தீர்கள். எனக்காக நீண்ட கால வேதனைகளை சகித்துக் கொண்டீர்கள். நான் இவ்வுலக ஒளியைக் காணும்போது வெறுமனே ஒரு சதைக்கட்டிதான். அப்போது நான் சக்தியேயில்லாதுபலயீனமாக இருந்தேன். எனினும், நீங்கள் இந்த சதைக் கட்டியை, உங்கள் உடல் வலுவைத் தியாகம் செய்து, இரத்தத்தை அமுதாக்கி ஊட்டி, தாலாட்டி, உவகையோடு, அவசியமான அத்தனையையும் தந்து கவனித்தீர்கள். நான் ஓரளவு வளர்ந்து வந்தபோது என் கல்விக்கான ஆக்கப் பணிகளைச் செய்தீர்கள். நான் அறிவு பெற வேண்டும்; நல்லதொரு மனிதனாக வாழ வேண்டும் என்ற மட்டில்லா ஆசையோடு

என்னவெல்லாமோ செய்தீர்கள். நான் நோயுற்றபோது நீங்கள் பொறுமை இழந்து கா ணப்பட்டீர்கள். என் கண்களில் நீர் வடிந்தால், உங்க ர இதயத்தில் இரத்தம் பீரிட்டு வருவதைப் போன்ற உணர்வைப் பெற்றீர்கள். ஊன், உறக்கம் இல்லாது காலத்தையும் சிரமத்தையும் எனக்காக அர்ப்பணித்தீர்கள். இவ்வாறு அன்போடு அரவணைத்து என்னை ஊட்டி வளர்த்த அன்னை நீங்கள். உங்கள் உணவை எனக்குத் தந்து நான் உண்பதைப் பசியுடன் பார்த்திருந்து பரவசம் அடைந்த அம்மா நீங்கள். எனக்கு அழகும் கவர்ச்சியும் நிறைந்த உடைகளை அணிவித்து அழகு பார்த்த நீங்களோ அலுக்கான பழைய உடைகளை அணிந்தீர்கள்.

உண்மையில், நீங்கள் எனக்காக தியாகம் செய்த உங்கள் பொன்னான காலமும் சிரமமும் அற்ப சொற்பமானவை அல்ல. அவற்றை என் நாவினால் மொழிந்து முடித்துவிட முடியாது. இவற்றுக்காக நான் எப்படித்தான் கைம்மாறு செய்வேனோ? நான் என்னதான் உங்களுக்குப் பணிவிடைகள் புரிந்தாலும், விழுந்து விழுந்து கவனித்தாலும் உங்கள் தன்னலமற்ற தியாகங்களுக்கு எதிரில் அவை மிக அற்பமானவையே!

பெற்ற தாயைக் கவனிக்கும் படியும், அவருக்கு உதவி ஒத்தாசைப் புரியும்படியும் அல்லாஹ் கட்டளை யிட்டுள்ளான். நீங்கள் எனக்கு இவ்வுலகில் நல்வாழ்வு பெற்றுத் தந்தீர்கள். உங்களுக்குப் பணிவிடைப் புரிவதும் உதவி ஒத்தாசைப் புரிவதும் என் நீங்காக் கடமை. அந்த வகையில் என் மிக உயர்ந்த விருப்பம் என்னவெனில், என்றும் நிரந்தரமான மறுவுலக வாழ்வில் நீங்கள் விமோசனம் பெற வேண்டும் என்பதுதான். எந்த வழியில் சென்றால் அந்த விமோசனம் கிடைக்குமோ அந்த வழியை உங்களுக்குக் காட்டித் தருவது என் கடமை.

—

அந்த வழி இஸ்லாம் ஒன்று மட்டுமே. நாம் இவ்வுலகிலும் மறு உலகிலும் வெற்றியும் விமோசனமும் பெறுவதற்கு இஸ்லாத்தைத் தவிர வேறு வழியே இல்லை. அதன்படி வாழ்வதே நன்று. எனவே, என் அம்மா! நீங்கள் இம்மதத்தை ஏற்று வாழ்வதைக் காண நான் துடியாத் துடிக்கின்றேன்; அவாவுறுகின்றேன்.

நான் வீட்டிலிருந்த வேளையில் பல முறை இதுபற்றி உங்களுக்கு விளக்கிக் கூற முயன்றேன். 'இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுங்களேன்' என்றுகூட வேண்டினேன். என்றாலும் நீங்கள் எத்தகைய கவனமும் எடுக்கவில்லை.

உண்மையில், இது தொடர்பாக நான் உங்களிடம் எதுவுமே எதிர்பார்க்கவில்லை. மேலும், எனக்கு உலக வாழ்வு தொடர்பான ஏதேனும் எதிர்பார்ப்போ, ஆசையோ, ஆர்வமோ இல்லை என்பது நீங்களும் அறிந்த விஷயம்.

என் உள்ளத்தைக் குடைந்து கொண்டிருக்கும் ஆர்வம், ஆசை, வேதனை எல்லாவற்றையும் ஒட்டு மொத்தமாக உங்கள் முன் சமர்ப்பிக்கட்டுமா அம்மா?

இதோ கேளுங்கள்:

பத்து மாதங்கள் சுமந்திருந்து என்னைப் பெற்ற என் அன்னை என் உயிரை விடவும் அன்பிற்குரியவர். அவர் என் கண் எதிரிலேயே கொழுந்து விட்டெரியும் நரக நெருப்பில் வீழ்ந்து வேதனைப் படுவதைக்காண, நான் ஒரு போதும் சகிக்க மாட்டேன். அந்த பயங்கர வேதனையிலிருந்து என் அன்பே உருவான அன்னையை மீட்டெடுப்பதுதான் என் ஒரே எண்ணம்!

அம்மா! நீங்கள் இப்போது பின்பற்றும் மதம் உங்களை நரகத்திற்குத்தான் இழுத்துச் செல்லும். அதை இன்னுமே நீங்கள் விளங்கிக் கொள்ளாது இருப்பது துரதிஷ்டமே!

இதை இன்னும் தெளிவாக நீங்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் ஓர் உதாரணத்தின் மூலம் கூறட்டுமா அம்மா.

நீங்கள் ஒரு புகையிரதத்தில் பயணம் செய்வதாக வைத்துக் கொள்ளுங்கள். அந்தப் புகையிரதம் போகும் பாதையில், சற்று தூரத்தே பாதை தடம் புரண்டிருப்பதை நான் தெளிவாக அறிவேன். அதில் பயணம் செய்யும் ஏராளமான பிரயாணிகள் இதை அறியாதுள்ளனர். ஆனால், அவர்கள் அனைவரும் தாம் போக வேண்டிய இடத்திற்குப் போக முடியாமற் போவதும், இடையில் பாரிய விபத்தொன்று நடக்கப் போவதும், அவர்களுள் பலர் பயங்கரமான முறையில் மரணத்தைச் சந்திக்கப் போகின்றனர் என்பதும் நான் நன்கு அறிந்த விவரங்கள். இதேவேளை என்னிடம் ஒரு மோட்டார் வண்டி உண்டு. அதில் பாதுகாப்பாகப் போக வேண்டிய இடத்திற்குப் போக முடியும். எனவே, அந்தப் புகையிரதத்தை நிற்பாட்டும் ஒவ்வொரு இடத்திலும் நான் பதற்றத்துடன் உங்களிடம் ஓடோடி வந்து, "அம்மா! இதில் பயணம் செய்வது ஆபத்து. உடனே இறங்கி வந்து என் மோட்டார் வண்டியில் ஏறி அமருங்கள். பாதுகாப்பாக எம் பயணத்தை மேற்கொள்ளலாம்" என்று அன்போடு அழைக்கின்றேன். மரணத்தைக் கொண்டுவரும் புகையிரதத்திலிருந்து இறங்கி என் வண்டியில் ஏறும்படி நான் உங்களிடம் மன்றாடிக் கேட்கின்றேன். எனினும் நீங்கள் என் அழைப்பை ஏற்கிறீர்கள் இல்லையே! என்றாலும் அந்தப் பயணத்தின் கோர விளைவை உணர்ந்த நான், உங்களைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டுதான் இருப்பேன்.

அம்மா! அந்த அழிவின் விளிம்பிற்குப் போகுமுன் புகையிரதத்திலிருந்து இறங்கி, என் மோட்டார் வண்டியில் ஏறிக்கொண்டால் நீங்கள் போகவேண்டிய இடத்திற்கு

சுகமாக போய்ச் சேர முடியும். இல்லையாயின், நீங்களும் மற்ற பிரயாணிகளுடன் சேர்ந்து கோர அழிவைத்தான் சந்திக்கப் போகிறீர்கள். அந்தக் கடைசி கட்டத்தில் நீங்கள், 'அந்தோ! என் மகன் விடுத்த அழைப்பை ஏற்றிருந்தால்.. அவனது மோட்டார் வண்டியில் ஏறியிருந்தால்..' என கைசேதப்பட்டு, அழுது புரண்டு பிரலாபிப்பீர்கள். அது காலம் கடந்துவிட்ட பரிதாப நிலை அல்லவா!

நீங்கள், நான் பயணத்தை மேற்கொண்டுள்ள இஸ்லாம் எனும் வாகனத்தில் வந்தமர்ந்து பயணத்தை ஆரம்பித்தால், நீங்கள் எதிர்பார்க்கும் இடத்திற்கு எத்தகைய இடையூறும் இன்றி பத்திரமாகப் போய்ச் சேர முடியும் என்பதில் ஐயமே இல்லை.

என்னுயிர்த் தாயே!

இவை என் உள்ளத்தில் உதித்த சில கருத்துக்கள். உங்கள் முன் சமர்ப்பித்துள்ளேன். இவற்றையிட்டு நன்றாகச் சிந்தியுங்கள். அல்லாஹ் உங்களை மிகச் சரியான பாதையில் பயணத்தை மேற்கொள்ளச் செய்வானாக!

''நீங்கள் இவ்வுலகை விட்டுப் பிரிந்து சென்ற பின் அல்லாஹ் உங்களையிட்டு திருப்தியுற வேண்டும்; அவனுடைய சுவன செல்வங்களுக்கு நீங்கள் உரித்துடையவராக வேண்டும்'' என, நான் இருகரம் ஏந்தி வல்லோனிடம் பிரார்த்தனைப் புரிகின்றேன்.

நான் எழுதியவை பற்றி நன்கு சிந்தித்து பதில் எழுதுவீர்கள் என திடமாக நம்புகின்றேன். அதோடு, என் குற்றங் குறைகளை மன்னிப்பீர்கள் எனவும் எதிர்பார்க்கின்றேன்.

*இவ்வண்ணம்,*

*பணிவன்புள்ள மகன்,*

*நஸீம் காஜி*



நீங்கள் உங்களது தாயை மட்டும் காப்பாற்றினால் போதுமா இன்னும் பல பிரயாணிகள் புகைபிரதத்தில் இருக்கிறார்களே. அவர்களை எப்போது காப்பாற்றி மாற்றி விடுவீர்கள் விரைந்து செல்லுங்கள்

ح المكتب التعاوني للدعوة والإرشاد بالبديعة : ١٤١٥هـ

فهرست مكتبة الملك فهد الوطنية

**خجي ، نسيم**

إلى أمي الحبيبة . . أسلمي : ترجمة شريف الدين محمد منصور

٤٠ صفحة ، ١٢ × ١٧ سم .

**ردمك ٢ ــ ٢١ ــ ٧٩٩ ــ ٩٩٦٠ .**

النص باللغة التاميلية .

١ ــ الوعظ والإرشاد . ٢ ــ الدعوة الإسلامية.

( أ ) منصور ، شريف الدين محمد ( مترجم ) .

(ب) العنوان .

ديوي ٢١٩,٢١٣ ١٥/١٣٣٤

رقم الإيداع : ١٥/١٣٣٤

ردمك : ٢ ــ ٢١ ــ ٧٩٩ ــ ٩٩٦٠

# إلى أمي الحبيبة: أسلمي

تأليف

نسيم خاجي

ترجمه للتاميلية

شريف الدين محمد منصور

شعبة الجاليات
(وزارة الشؤون الإسلامية مركز الدعوة بالرياض)
تليفون ٤١١٦٣٥٦ / ٠١ - الرياض ١١١٣١

المكتب التعاوني للدعوة والإرشاد بالبديعة
تليفون ٤٣٣٠٨٨٨ / ٠١ فاكس ٤٣٠١١٢٢ / ٠١
ص.ب ٢٤٩٣٢ الرياض ١١٤٥٦

المكتب التعاوني للدعوة والإرشاد بالبطحاء
تليفون ٤٠٣٠٢٥١ - ٤٠٣٤٥١٧ / ٠١
فاكس ٤٠٣٠١٤٢ / ٠١
ص.ب ٢٠٨٢٤ الرياض ١١٤٦٥

المكتب التعاوني للدعوة والإرشاد العليا والسليمانية
تليفون ٤٦٢٩٩٤٤ / ٠١
ص.ب ٦٣٩٤٤ الرياض ١١٥٢٦

المكتب التعاوني للدعوة والإرشاد العزيزية
تليفون ٤٩٥٥٥٥٥ / ٠١
ص.ب ٤٢٣٤٧ الرياض ١١٥٥١

المكتب التعاوني للدعوة والإرشاد الدوادمي
تليفون ٦٤٢٣٦٣٦ / ٠١
ص.ب ١٥٩ الدوادمي

المكتب التعاوني للدعوة والإرشاد بالخرج
تليفون ٥٤٤٠٦٦٢ / ٠١ فاكس ٥٤٨٠٩٨٣ / ٠١
ص.ب ١٦٨ الخرج ١١٩٤٢

المكتب التعاوني للدعوة والإرشاد الربوة
تليفون ٤٩٧٠١٢٦ / ٠١
ص.ب ٢٩٤٦٥ الرياض ١١٤٥٧

المكتب التعاوني للدعوة والإرشاد رياض الخبراء
تليفون ٣٣٤١٧٥٧
ص.ب ١٦٦ القصيم رياض الخبراء

المكتب التعاوني للدعوة والإرشاد بالمجمعة
تليفون ٤٣٢٣٩٤٩ / ٠٦
ص.ب ١٠٢ المجمعة ١١٩٥٢

المكتب التعاوني للدعوة والإرشاد بالروضة
تليفون ٤٩١٨٠٥١ فاكس ٤٩٧٠٥٦١
ص.ب ٨٧٢٩٩ الرياض ١١٦٤٢

المكتب التعاوني للدعوة والإرشاد بالنسيم
تليفون ٢٣٢٨٢٢٦ / ٠١
ص.ب ٥١٥٨٤ الرياض ١١٥٥٣

المكتب التعاوني للدعوة والإرشاد بالزلفي
تليفون ٤٢٢٥٦٥٧ / ٠٦ فاكس ٤٢٢٤٢٣٤ / ٠٦
ص.ب ١٨٢ الزلفي ١١٩٣٢

مكتب توعية الجاليات بعنيزة
تليفون ٣٦٤٤٥٠٦ / ٠٦ ص.ب ٨٠٨

مركز توعية الجاليات ببريدة
تليفون ٣٢٤٨٩٨٠ / ٠٦ فاكس ٣٢٤٥٤١٤ / ٠٦
ص.ب ١٤٢

مكتب دعوة وتوعية الجاليات بالرس
تليفون ٣٣٣٣٨٧٠ / ٠٦ ص.ب ٦٥٦

مكتب توعية الجاليات المذنب
تليفون ٣٤٢٠٨١٥ / ٠٦ فاكس ٣٤٢٠٨١٥ / ٠٦
القصيم - المذنب - ص.ب ٤٠٠

المكتب التعاوني للدعوة وتوعية الجاليات بشقراء
تليفون ٦٢٢٢٠٦١ / ٠١ ص.ب ٢٤٧

المكتب التعاوني للدعوة والإرشاد بالأحساء
تليفون ٥٨٧٤٦٦٤ - ٥٨٦٦٦٧٢ / ٠٣
ص.ب ٢٠٢٢ الأحساء ٣١٩٨٢

مكتب توعية الجاليات بالخبر
تليفون ٨٩٨٧٤٤٤ / ٠٣ الدمام ٣١١٣١

المؤسسة الخيرية للدعوة بجدة
تليفون ٦٧٣١٧٥٤ - ٦٧٣٠٤٣١ / ٠٢
فاكس ٦٧٣١١٤٧
ص.ب ١٥٧٩٨ جدة ٢١٤٥٤

مكتب توعية الجاليات بحائل
تليفون ٥٣٣٤٧٤٨ / ٠٦ فاكس ٥٤٣٢٢١١ / ٠٦
ص.ب ٢٨٤٣

المكتب التعاوني للدعوة والإرشاد بالحوطة
تليفون ٥٥٥٠٥٩٠ / ٠١
حوطة بني تميم - ص.ب ٢٠٧

مكتب توعية الجاليات بالأحساء - المملكة العربية السعودية
تحت إشراف وزارة الشؤون الإسلامية والأوقاف والدعوة والإرشاد
ص.ب ٢٠٢٢ الأحساء ٣١٩٨٢ - هاتف ٥٨٦٦٦٧٢ - فاكس ٥٨٧٤٦٦٤

**Al-Ahsa Da'awa & Guidance Center - K.S.A.**

Under Supervision of the Ministry of Islamic Affairs
Endowment Guidance & Propagation

*P.O. Box 2022 Al-Ahsa 31982 - Tel. 5866672 - Fax 5874664*



مطبعة النرجس التجارية
NARJIS PRINTING PRESS
تلفون : ٢٣١٦٦٥٣ / ٢٣١٦٦٥٤
فاكس : ٢٣١٦٨٦٦ الرياض